# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 56
மே 2013

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**ஆமோஸ்**

2701 கர்த்தருடைய பரிசுத்த நாமத்தைக் குறைச்சலாக்காதே (2:7)
2702 உன் அரமனைகளில் கொடுமையையும் கொள்ளையையும் குவியாதே (3:10)
2703 நியாயத்தை எட்டியாக மாற்றி, நீதியைத் தரையிலே விழப்பண்ணாதே (5:7)
2704 நியாயத்தை நஞ்சாகவும், நீதியின் கனியை எட்டியாகவும் மாற்றாதே (6:12)
2705 பலத்தினாலே எனக்குக் கொம்புகளை உண்டாக்கிக் கொள்ளவில்லையே என்று சொல்லி, வீண் காரியத்தில் மகிழாதே (6:13)
2706 செம்மையானதைச் செய்ய அறி (3:10)
2707 கர்த்தரைத் தேடு; அப்பொழுது பிழைப்பாய் (5:4,6)
2708 நீ பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, நன்மையைத் தேடு (5:14)
2709 நீ தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, நியாயத்தை நிலைப்படுத்து (5:15)
2710 கர்த்தருடைய வேதத்தை வெறுக்காமல், அவருடைய கட்டளைகளைக் கைக்கொள் (2:4)
2711 கர்த்தரிடத்தில் திரும்பு (4:11)
2712 உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு (4:12)

**ஒபதியா**

2713 உன் இருதயத்தில் அகந்தை கொள்ளாதே; அது உன்னை மோசம் போக்கும் (3)
2714 உன் சகோதரன் அந்நியர் வசமான நாளை பிரியத்தோடே பாராதே (12)
2715 ஒருவனுடைய அழிவின் நாளிலே அவர்கள் நிமித்தம் சந்தோஷப்படாதே (12)
2716 ஒருவன் நெருக்கப்படுகிற நாளிலே நீ பெருமையாய் பேசாதே (12)
2717 என் ஜனத்தின் ஆபத்துநாளிலே அவர்கள் அநுபவிக்கிற தீங்கை நீ பிரியத்தோடே பாராதே (13)
2718 என் ஜனத்தின் ஆபத்துநாளிலே அவர்கள் ஆஸ்தியில் கைபோடாதே(13)
2719 என் ஜனத்தின் இக்கட்டு நாளில் அவர்களைக் காட்டிக் கொடாதே (14)

**யோனா**

2720 பொய்யான மாயையைப் பற்றிக் கொள்வதனால், உனக்கு வரும் கிருபையைப் போக்கடியாதே (2:8)
2721 உன் பொல்லாத வழியையும், உன் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பு (3:8,10)
2722 நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதல்ல (4:4,9)
2723 பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவனாயிரு (1:9)
2724 உன் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடு; அவர் உனக்கு உத்தரவு அருளுவார் (2:2)
2725 யோனாவைப் போல பாதாளத்தின் வயிற்றிலிருந்தாலும், கர்த்தரை நோக்கிக் கூக்குரலிடு; அவர் உன் சத்தத்தைக் கேட்பார் (2:2)
2726 உன் ஆத்துமா தொய்ந்து போகையில் கர்த்தரை நினை; உன் விண்ணப்பம் கர்த்தரிடத்தில் சேரும் (2:7)



2727) துதியின் சத்தத்தோடே கர்த்தருக்குப் பலியிடு (2:9)
2728) கர்த்தருக்குப் பண்ணின பொருத்தனையைச் செலுத்து (2:9)

**மீகா**

2729) அக்கிரமத்தை யோசியாதே (2:1)
2730) உன் படுக்கைகளின் மேல் பொல்லாப்பு செய்ய எத்தனம் பண்ணாதே (2:1)
2731) உன் கையில் வல்லமை இருக்கிறபடியினால், வயல்களை இச்சித்துப் பறித்துக்கொள்ளாதே; வீடுகளை இச்சித்து எடுத்துக்கொள்ளாதே (2:1,2)
2732) புருஷனை / மனுஷனை, அவன் வீட்டை / சுதந்தரத்தை ஒடுக்காதே; அவனுக்கு ஐயோ (2:2)
2733) நன்மையை வெறுக்காதே; தீமையை விரும்பாதே (3:2)
2734) உன் கிரியைகளில் பொல்லாதவனாயிராதே (3:4)
2735) பரிதானத்துக்கு நியாயந்தீர்க்காதே (3:11)
2736) கூலிக்கு உபதேசியாதே (3:4)
2737) பணத்துக்குத் தீர்க்கதரிசனம் சொல்லாதே (3:4)
2738) சூனிய வித்தைகள் உன் கையில் இராதிருப்பதாக (5:12)
2739) நாள் பாராதே (5:12)
2740) உன் கையின் கிரியையைப் பணியாதே (5:13)
2741) பொய் பேசாதே (6:12)
2742) பொல்லாப்பு செய்யாதே (7:3)
2743) சுரூபங்களும் சிலைகளும் வேண்டாம் (5:13,14)
2744) உன் வீட்டிலே துன்மார்க்கத்தினாலே சம்பாதித்த பொக்கிஷங்கள் இராமலிருப்பதாக (6:10)
2745) உன் வீட்டிலே அருவருக்கப்படத்தக்க குறைந்த மரக்கால் இராமலிருப்பதாக (6:10)
2746) கள்ளத்தராசும் கள்ளப்படிக்கற்களுள்ள பையும் வேண்டாம் (6:11)
2747) கொடுமை வேண்டாம் (6:12)
2748) கபடமுள்ள நாவு கூடாது (6:12)
2749) அதிபதியே! நியாயத்தை அருவருத்து, செம்மையானவைகளையெல்லாம் கோணலாக்காதே (3:9)
2750) அதிபதியே! நியாயம் இன்னதென்று அறி (3:1)

---

ூம் பக்க தொடர்ச்சி....

## *வல்லமை முகாம்* – நடைபெறும் தேதி மே 16~18

இம்முகாம் நமது கிருபையின் ஊழியங்களின் மூலம் குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காக நடத்தப்படும் வருடாந்திர முகாமாகும்.

1. இம்முகாமின் தேவை ரூ.75.000./-சந்திக்கப்பட..
2. வல்லமை முகாமிற்கு வரும் குடும்பங்களின் வீடுகள் அப்12:12இல் உள்ள மரியாள் வீட்டைப் போல ஜெபவீடாக மாற...
3. அப்10:24இன்படி முகாமிற்கு வரும் குடும்பத்தினர் கொர்நேலியு போல் உறவினர் சிநேகிதர்களைக் கிறிஸ்துவுக்காய் ஆதாயம் பண்ணுகிற வர்களாய் மாற.. அவர்களை முகாமிற்கு தங்களுடன் அழைத்து வர..
4. முகாம் நடைபெறும் இடம் முழுவதையும் தேவன் ஆளுகை செய்ய

# தலைமைத்துவம் (LEADERSHIP)

Dr. பொ. செல்வராஜ்

1. சிலர் தலைமைத்துவம் பயிற்றுவிக்கப்பட வேண்டிய ஒன்று என்று கருதுவர். வேறு சிலர் தலைமைத்துவத்தோடு பிறக்கிறவர் உண்டு என்று கூறுவர். இரண்டு கருத்துக்களிலும் உண்மை இருக்கிறது.
2. பெரிய தலைவர்கள் இருக்கிறார்கள், சிறப்பாக செயல்படுகிறவர்கள் இருக்கிறார்கள் மற்றும் ஆழமாக சிந்திக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவ்வப்போது இம்மூன்று சிறப்புகளையும் ஒருங்கே உடைய ஒருவர் பிறக்கிறார். அதற்கு எடுத்துக்காட்டாக "மைக்கேல் ஏஞ்சலோ" வை கூறலாம்.. ஏனெனில் அவர் ஓவியராக, சிற்பியாக, பொறியியலாராக, எழுத்தாளராக, மற்றும் பொதுநல சிந்தனையாளராக இருந்தார். அவர் ஒருமுறை இவ்வாறு கூறினார்."நம்முடைய பிரச்சனை உயர்ந்த இலக்கை வைத்து அதைத் தவற விட்டுவிடுவதல்ல, மாறாகக், குறைந்த இலக்கை வைத்து கொண்டு அதை அடைந்து விடுகிறோம் என்பதே".
3. என்ன நேர்ந்தாலும், நாம் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருந்தாலும், எத்தனை இன்னல்கள் நமக்கிருந்தாலும், நடக்கப்போவது எதுவாக இருந்தாலும், நண்பர்களே உங்களால் அதை செய்ய முடியும்.
4. நீங்கள் உங்களுடைய முயற்சியை விட்டுவிடும்போது தோல்வி அடைவதற்கு உங்களுக்கு நீங்களே அனுமதி தருவது போலாகும். மற்றவர்கள் உங்களால் முடியாது என்று கூறலாம். அல்லது உங்களுடைய முயற்சியை நீங்கள் கைவிட்டுவிட வேண்டும் என்று கூறலாம். ஆனால் அதற்கெல்லாம் நீங்கள் உடன்படாதிருந்தால் நல்லதோர் போராட்டத்தை நீங்கள் போராடலாம். எதுவரை என்றால் நீங்கள் கடைசி ஆளாக நிலைத்து நிற்கும் வரை.
5. மாமனிதர்களைப் பற்றி நாம் நினைக்கும்போது அவர்களுடைய சிறப்பிற்குப் பின்னணியில் இருப்பது, அவர்களுடைய மற்றவர்களை வியப்பில் ஆழ்த்தும் ஏதாவதொரு செயல்பாடாக அல்லது சாதனையாக இருக்கும். அம்மனிதர்கள் எப்போதும் புதிய சிகரங்களை அடைபவர்களாகவும் சிறப்பின் புதிய அளவை எட்டுகிறவர்களாகவும் இருந்திருப்பார்கள். தங்களுடைய தரிசனத்தைப் புதிய வழிகளில் வெளிப்படுத்துவதற்கு தொடர்ந்து முயலுகிறவர்களாக அவர்கள் இருந்திருக்க வேண்டும்.
6. ஆற்றில் தொடரலைகளைத் தோற்றுவிக்க ஒரு சிறிய கூழாங்கல் போதும் அதைப் போல உங்களுடைய வாழ்க்கையையும் ஏன் உலகத்தையும் மாற்றுவதற்கு உங்களுடைய சிறிய முயற்சி ஒன்று போதுமே.
7. ஒரு சாதாரண மனிதனுக்கும், ஒரு அசாதாரணமான மனிதனுக்கும், இடையில் உள்ள வேறுபாடு இதுதான். முதலாம் நபரைப் பார்க்கிறவர்கள் ஓ!, அவருடைய செயல்பாட்டைப் பார்த்தீர்களா என்று கூறுவர். இரண்டாம் நபரைப் பார்க்கிறவர்கள் ஓ!, அந்த மிருகம் செய்ததைப் பார்த்தீர்களா என்று கூறுவர். உண்மைதான்! அசாதாரணமான விலங்குகளும் இருக்கத்தான் செய்கின்றன!!
8. இதோ அற்புதமானதோர் வாழ்க்கைக்கு ஒரு உணவு தயாரிக்கும் முறை : ஒரு கிண்ணத்தில் ஞானத்தை எடுத்துக் கொண்டு, அதில் ஒரு தேக்கரண்டி



பொறுமையையும், இரண்டு அளவு தீரத்தையும் மூன்று அளவு நிச்சயமின்மையையும், நான்கு அளவு அறிவாற்றலையும், சற்று அதிகமாக அன்பையும் சேர்த்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றையும் நன்றாகக் கலக்கி பல ஆண்டுகள் அப்படியே வைத்திருந்து பிறகு உலகிற்குக் காட்டுங்கள்.
9. போட்டியிடுபவர்களுக்குத் துணிச்சலும், மனித சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டும் எனும் உந்துதலும், தடைகளை மேற்கொள்ளும் துணிச்சலும், தன்னுடைய அனுபவத்தைப் பிறருக்குத் தெரியப்படுத்துவதில் திறனும் இருக்குமாயின் அவர்கள் முழுமையான வெற்றியாளர்களாவது திண்ணம்.
10. வாழப்படாத வாழ்க்கை ஒன்றுமில்லாத வாழ்க்கை, அனுபவம் இல்லாத வாழ்க்கை ஒன்றுமில்லாத வாழ்க்கை, ஆராயப்படாத வாழ்க்கை ஒன்றுமில்லாத வாழ்க்கை, நீங்கள் தயங்கினால் சந்தேகித்தால் உங்களுக்குள் இருக்கும் வல்லமையுள்ள, உண்மையான தன்மையைப் பாராவிட்டால், உங்களுக்கு இலக்கு இல்லை என்பது பொருள்.

### *II. தலைப்பு : கிறிஸ்துவைப் போன்ற தலைமைத்துவ பண்புகள்*

எல்லோருமே ஏதாவது ஒரு வகையில் தலைமைத்துவத்திற்கு என்று அழைக்கப்பட்டவர்கள். ஒரு தந்தை குடும்பத்தில் ஆவிக்குரிய வழிகாட்டியாக இருக்கிறார். பெற்றோர் பிள்ளைகளின் வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் வகுப்பை நடத்துகிறார். உரிமையாளர் உழைப்பாளர்களின் தலைவராக இருக்கிறார். ஒரு போதகர் சபையை வழி நடத்துகிறார். மூத்த மாணவர்கள் இளைய மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கிறார்கள்.

### III. ஆவிக்குரிய தலைவருக்கான 10 அடையாளங்கள் (எபே. 5:18)

ஆவிக்குரிய தலைவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவராக இருக்க வேண்டும். அவருடைய வல்லமையானது செய்யமுடியாததைக் கூட செய்துவிடும். ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை எப்படி இருக்கும்?

1. ஒப்புக் கொடுக்கப்பட்ட வாழ்க்கை
2. தேவபக்தி
3. ஆவிக்குரிய முன்னுரிமைகளைப் பேணுதல்
4. பிறரைப் பரிசுத்தத்திற்கு நேராக நடத்துதல்
5. பிறரைக் கிறிஸ்துவண்டை நடத்துதல் (அப் 1:8)
6. கீழ்ப்படிதலும் கவனித்தலும்
7. ஒழுங்கு
8. பட்சபாதமின்மை
9. சோதனை நேரத்தில் கிருபை ( எபி 4:16)
10. ஆவிக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்துதல்.

## IV. பணிவிடைத் தலைமைத்துவத்தின் 5 கிருபைகள்

இராணுவமானது அடித்தளத்திலிருந்து மேல் நோக்கி தலைவர்களை உருவாக்குவதைப் பற்றிப் பேசுகிறது. ஆனால் பரலோகத்தில்' இருந்து கீழ்நோக்கி தலைவர்களை உருவாக்குவதே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. இதற்குரிய எடுத்துக்காட்டை பிலி 2:15-18ல் நாம் பார்க்கிறோம். உலகம் கூறும் தலைமைத்துவம் பணிவிடைத் தலைமைத்துவத்திற்கு எதிரானது. முன்னது பணிவிடை பெற்றுக்கொள்ளும் உரிமை பற்றியது. பின்னது பணிவிடை செய்யும்

வாய்ப்பைப் பற்றியது. பணிவிடைத் தலைமைத்துவம் கிருபையில் துவங்கி கிருபையுடன் செயல்படுகிறது (II பேதுரு 3:18).

1. தேவனுக்கு முதலிடம் : கிருபை பொருந்திய இதயம் விக்கிரக ஆராதனையைத் தவிர்க்கிறது (எபி 13:9)
2. மனத்தாழ்மை :
கிருபை பொருந்திய இதயம் அகந்தையைத் தவிர்க்கிறது (யாக் 4:6).
3. பெலவீனம்:
நம்முடைய பெலவீனமே தேவனைக் கவருகிறது. பெலனல்ல (IIகொரி 12:9)
4. ஆராதனை : ஆராதனையின்றி தலைவராக செயல்பட முடியாது (யோசு.5:13-14)
5. ஊழியத்தில் மகிழ்ச்சி : தலைமைத்துவத்திற்கான புதிய ஏற்பாட்டு ஆயதம் ஒரு பிரம்பு அல்ல. ஒரு துவாலை ஆகும். பணிவிடைத் தலைவர் ஒரு அரசனல்ல ஒரு மேய்ப்பர் (யோவா 13:14,5) IIகொரி. 1:24,4:5). தேவ கிருபை இருந்தால்தான் பணிவிடைத் தலைமைத்துவம் இருக்கும், எனவே தேவ கிருபையில் நாம் வளர வேண்டும் (II பேது 3:18).

### V. பணிவிடைத் தலைமைத்துவத்திற்கான 3 குணநலன்கள்

உயர்நிலை தலைமைத்துவத்திற்கு உயர்நிலை மனத்தாழ்மை இன்றியமையாதது (பிலி 2:7).

1. பணிவிடைத் தலைவருக்கு பதவி முக்கியமல்ல குழுவில் இருப்பதே மகிழ்ச்சி (பிலி 2:5)
2. பணிவிடைத் தலைவர் பிறருக்கு உதவுவதற்கென்றே இருக்கிறார்.
3. பணிவிடைத் தலைவருக்கு தனிப்பட்ட குறிக்கோள் எதுவும் இல்லை (மாற் 10:45). சுருங்கக்கூறின் ஒவ்வொருவரும் யாராவது வழிகாட்டியாக இருக்கிறோம். கிறிஸ்துவைப் போன்ற தலைமைத்துவத்துக்குரிய முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு : நாம் எந்த பொறுப்பில் இருந்தாலும் நமக்கு அவை பயன்படும்.

1. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுதல்
2. சுயத்திற்கு முதலிடம் கொடுக்காமல் இருந்தல்
3. தேவ ஆவிக்குப் பணிதலும் அதனால் நிரபப்படுதலும்
4. ஒழுக்கமுள்ள வாழ்க்கை
5. வேதாகமத்தையும் இதர நல்ல புத்தகங்களையும் தொடர்ந்து வாசித்தல்.
6. தேவ ஞானத்தை நாடி, கேட்டு, பெற்றுக்கொண்டு பயன்படுத்துதல்
7. உண்மையுடனும் கரிசனையுடனும் இருந்தல்
8. தேவனுக்குகந்த நண்பர்களை உடையவர்களாக இருத்தல்
9. மன்னிக்க அறிந்திருத்தல்
10. இயேசுவினால் ஏற்றுக்கொள்ளப்படுதல்
11. பிறருக்காக ஜெபித்தல்
12. பிறர் முன்னேற உதவி செய்தல்
13. தரிசனத்துக்கும், விருப்பத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அறிந்து வைத்திருத்தல்.
14. தரிசனத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் இருத்தல்
15. ஊழியத்தின் அவசரத்தைப் புரிந்து கொள்ளுதல்
16. மன உறுதியுடன் இருத்தல்
17. இரக்கத்துடன் நடந்து கொள்ளுதல்



18. இயேசுகிறிஸ்துவை நேசிப்பதில் வளருதல்
19. குடும்பத்தை நேசித்தல்
20. சபையை நேசித்தல்.

இந்த பட்டியலைப் பார்க்கும் போது நமக்கு தயக்கம் ஏற்படுவது இயல்பு. ஏனெனில் நாமாகவே மேற்கூறிய பண்புகளைப் பெற்றுக்கொள்ள இயலாது. ஆனாலும் இந்த பட்டியலால் நீங்கள் உற்சாகத்தை இழக்க வேண்டாம். அது தேவனுடைய வல்லமைக்கு நேராக உங்களை வழிநடத்தட்டும். ஒன்று நிச்சயம் தேவனுடைய அழைப்பைத் தொடர்ந்து தேவனால் நாம் பலப்படுத்தப்படுகிறோம். என்பதை மறந்துவிட வேண்டாம். தேவனால் நீங்கள் தலைமைத்துவத்திற்கென்று அழைக்கப்பட்டிருந்தால் அதற்கு தேவையான அவருடைய வல்லமை உங்களுக்கு உண்டு.

# *உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு*

பா. பொற்செல்வன் ஆசீர்

இயேசுவினிடத்தில் ஒருவன் வந்து நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். மாற்கு10:17) அவனிடத்தில் இயேசு அன்புகூர்ந்து உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு. (மாற் 10::21) என்று உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு... பின்பு சிலுவையை எடுத்துக் கொண்டு என்னை பின்பற்றி வா என்றார்.

லேகியோன் பிசாசு நீங்கின மனுஷன் இயேசுவோடு இருக்க உத்தரவு கேட்டான் லூக் 8:38 அவனுக்கு இயேசு அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் தேவன் உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி (லூக்8:39) என்று சொல்லி அனுப்பிவிட்ட தேவன். இவனை தன்னை பின்பற்றி வர கூறுகிறார்.

ஆபிரகாமை அழைத்து அவனை ஆசீர்வதித்து மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை உடைய சீமானாக்கிய தேவன் இவனை விற்று கொடுத்து பின்பற்ற சொல்கிறார்.

எஸ்தரை இராஜாத்தியாக்கி யூதரை அவள் மூலம் அழிவுக்கு தப்புவித்த தேவன். மோசேயை பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்ற ஸ்தானத்தையும் அரண்மனையும் குமாரத்தியின் மகன் என்ற ஸ்தானத்தையும் அரண்மனையும் விட்டு வெளியே வரச் செய்து இஸ்ரவேல் ஜனத்தை அவன் மூலம் விடுவிக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்திற்கு தண்ணீர் அளிக்க முதல் முறை கன்மலையை அடிக்கச் சொன்னவர் (யாத் 17:6) இப்போது கன்மலையோடு பேசு அப்போது தண்ணீர் புறப்பட்டு வரும் என்கிறார். (எண்20:8)

மாராவின் கசப்பான தண்ணீரின் கசப்பை மாற்றி மதுரமாக்க ஒரு மரத்தை காண்பித்த தேவன் யாத் 15:25 எலிசாவை கொண்டு கெட்ட தண்ணீரை ஆரோக்கியமாக்க நீரூற்றில் உப்பை போடச்செய்கிறார்.2இராஜா2:21.

பெலிஸ்தியரோடு யுத்தம் பண்ண தாவீது ராஜாவான பின் முதல் தரம் புறப்படுகையில் போ என்று சொன்னவர் 2சாமு 5:19 இரண்டாந்தரம் தாவீதுராஜா அதே பெலிஸ்தியரோடு யுத்தம்பண்ண புறப்படுகையில் கர்த்தர் நீ நேராய்

போகாமல் அவர்களுக்கு பின்னாலே சுற்றி எழும்பிப்போ 2சாமு 5:22 என்கிறார்

பர்த்திமேயு என்ற குருடனைப் உடனே பார்வையடைய செய்தவர் மாற்கு10:52 மற்றொரு பிறவி குருடனான மனுஷனைன பார்வையடைச் செய்ய உமிழ்நீரினால் சேறுண்டாக்கி அந்தச் சேற்றை பூசி ஸீலோவாம் குளத்திலே கழுவு என்கிறார். யோவா9:6 7

தன்னை உண்டாக்கினவனே பார்த்து உண்டாக்கப்பட்ட மண்ணோடு ஏன் என்று கேட்கலாமா அவர் எல்லாவற்றையும் அதனதன் காலத்தில் நேர்த்தியாய் செய்கிறவர். ஆகையால் நாம் என்ன செய்ய வேண்டும்?

### காத்திருங்கள்

தேவனுடைய சமூகத்தில் காத்திருக்க வேண்டும். உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார். உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார். ஏசா30:18 எத்தனை பாக்கியம் கர்த்தர் நமக்காக காத்திருக்கும் போது நாம் அவருக்கு காத்திருக்க வேண்டியது எத்தனை அவசியம்.

யோசுவாவைப் பாருங்கள் எரிகோவை ஜெயித்த வெற்றிகளிப்பில் ஆயியின் மேல் யுத்தம் பண்ண போகும்போது தேவனிடம் விசாரிக்காமல் தேவன் வெற்றி தருவாரா என காத்திருந்து கேட்காமல் சென்றான். அதனால் இரு தவறு நேர்ந்தது. ஒன்று தங்களுக்குள் இருந்த தங்களை கலங்கப்பண்ணும் ஆகானை (யோசுவா7:25) கண்டு பிடிக்க முடியவில்லை.

இரண்டாவது யுத்தமுறை எது என்று அறியாது போனான். யோசு7:3.4 பின்பு கர்த்தர் யோசுவா 8:2ல் யுத்த முறையை கற்றுக் கொடுக்கிறார்.

யோசு9:14 வாசியுங்கள். இஸ்ரவேலர் கர்த்தரின் வாக்கை கேளாமல் என்கிறது வேதம் ஆம் யோசுவா9ம் அதிகாரம் இஸ்ரவேலர் கிபியோனின் குடிகளின் தந்திரமான யோசனையில் சிக்கி கொள்ளுகிறார்கள். காரணம் என்ன கர்த்தரின் வார்த்தையை கேளாததுதான்.

மனதின் தோற்றத்தை மனதில் வரும் எண்ணத்தை நம்பி கர்த்தரை சார்ந்து அவர் என்ன சொல்கிறார் என்பதை கேட்க காத்திருக்க மனமில்லை. நீங்களும் அப்படி ஆகாதிருங்கள்.

### அமர்ந்திருங்கள்

**நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள் சங்46:10**

சங்106:32 33 வாசியுங்கள். மோசே தன் உதடுகளினால் பதறி பேசினான். இந்த சம்பவம் எண்20:1-13ல் காணப்படுகிறது. அமர்ந்திருக்க மறந்து தேவன் பேச சொல்ல கன்மலையை அடிக்க துணிந்து விட்டான். முடிவு என்ன எகிப்திலிருந்து அழைத்து வந்த மோசே கானானுக்குள் அந்த ஜனங்களை வழிநடத்தி செல்லும் சிலாக்கியம் இழந்து வனாந்திரத்தில் மரித்தான்.

கீழ்ப்படியுங்கள்

விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி. கீழ்ப்படியாதவர்களோடே கூடச் சேதமாகாரிருந்தாள்.

யோனாவைப் பாருங்கள் தேவன் நினிவேக்கு செல்ல சொன்னார். அவனோ



தர்ஷீசுக்கு கப்பல் ஏறினான். கீழ்ப்படியாமை குறித்த பயம் இல்லாமல் தூங்குகிறான். இன்றைக்கு அநேகர் தேவனுக்கு கீழ்ப்படிய மறந்து அதை குறித்து தேவபயம் இல்லாதிருப்பதுபோல் யோனாவும் இருக்கிறான். பலன் அவன் கடலிலே தூக்கி போடப்பட்டான். கப்பலில் உள்ள மற்றவர்களுக்கும் பிரச்சனை.

தேவனுக்கு கீழ்படியாத ஒரு தேவனுடைய பிள்ளை ஆசீர்வாதத்தை ஜனத்திற்கு, குடும்பத்திற்கு கொண்டு வருவதற்கு பதிலாக பிரச்சனையை இழப்பைத்தான் கொண்டு வரமுடியும்.

ஆனால் ராகாபோ தான் கீழ்ப்படிந்ததினால் எரிகோவின் குடிகளோடு தானும் அழியாது தனது குடும்பத்தையும் அழிவுக்கு நீங்கலாக்கி பாதுகாத்து யோசு. 6:25 அவர்களுக்கு ஆசீர்வாதமாக மாறினான். இயேசுவின் வம்ச வரலாறு பட்டியலிலும் அவள் பெயர் வருகிறதை காணுங்கள். மத்1:5.

### செயல்படுங்கள்

நோவா அப்படியே செய்தான். தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான் ஆதி6:22 எத்தனை அழகான வசனம் பாருங்கள். அற்புதமான வார்த்தைகள்.

நீங்களும் காத்திருந்து கர்த்தரின் வார்த்தையை பெற்று பெற்ற கர்த்தரின் வார்த்தையின் மேல் அப்படியே அமாந்திருந்து சொந்த முறைமைகளை தவிர்த்து பதறாமல் கீழ்ப்படிந்து செயல்வடிவம் கொடுங்கள். ஆசீர்வாமாவீர்கள். எதில் குறைவு படுகிறீர்கள்! கண்டுபிடித்து தேவசமூகம் அமாந்துதிருந்திக் கொள்ளுங்கள்.

திருந்திடுவோமே திருத்திக் கொள்வோமே அடங்கியே அவர்பாதம் அமைவோம்.

---

## முப்பெரும் முகாமிற்கான ஜெபக்குறிப்புகள்

**இதன் மொத்த தேவை ரூ. 1 இலட்சத்து 75 ஆயிரம்**

### வெற்றி முகாம் – நடைபெறும் தேதி மே 16~18

இம்முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் வாலிப சகோதர சகோதரிகளின் ஆசீர்வாதத்திற்காக ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும்.

1. வெற்றி முகாமின் தேவை ரூ.60.000 சந்திக்கப்பட
2. ஏசா43:5-7 வசனங்களின் படி தேவன் முகாமிற்கு வாலிப சகோதர சகோதரிகளைக் கொண்டு வரும்படியாக...
3. ஏசா44:3இன்படி முகாமிற்கு வரும் சந்ததியும் சந்தானமுள்ள வாலிபர் மேல் பரிசுத்த ஆவியாவரையும் ஆசீர்வாதத்தையும் தேவன் ஊற்ற..

### குதூகல முகாம் – நடைபெறும் தேதி மே 16~18

இம்முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் சிறுவர்களின் ஆசீர்வாதத்திற்காக ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும்.

1. இம்முகாமின் தேவை ரூ.40.000 சந்திக்கப்பட
2. ஏசா54:14இன்படி முகாமிற்கு வரும் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப்பட...
3. மத்.19:14இன்படி சிறு பிள்ளைகள் முகாமில் தடையில்லாமல் கலந்து கொள்ள..

தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க...

# *தேர்வு முடிவுகளை எதிர்நோக்கி....*

*கிறிஸ்துவுக்குள் பிரியமான தம்பி தங்கைக்கு*

*இதற்கு முன்னர் விடுறை காலத்தைப் பயனுள்ள முறையில் செலவழிப்பது குறித்து உனக்கு எழுதியிருந்தது பயனாய் இருந்திருக்கும் என நம்புகிறேன். இப்போது நீ தேர்வு முடிவுகளுக்காய் காத்துக் கொண்டிருப்பாய் குறிப்பாக S.S.L.C., +2 மாணவர்கள் பெரிய எதிர்பார்ப்போடு இருப்பீர்கள்.*

*உன் கைக்கிரியையின் பலனுக்குத் தக்கதாக உனக்குக் கிடைக்கும் (நீதி. 12:14) எனவே சரியான பலனை தேவனே எனக்குத் தருவார் என்று நம்பிக்கையோடிரு. நீ கண்ணீரோடே விதைத்ததற்கு கெம்பீரமான அறுவடை உனக்கு உண்டு (சங். 126:5) எனவே, நீ திடனாயிரு, குழம்பிக்கொண்டிருக்க வேண்டாம். பயம்தான் உன்னைச் செயல்படாமல் ஆக்கிவிடும் கொடிய விஷம். நீ நட்டதற்கும், உன் பெற்றோரும், ஆசிரியர்களும் நீர் பாய்ச்சியதற்கும் சரியான விளைச்சலை தேவன் உனக்குக் கட்டாயம் தருவார்.*

*தேர்வு எழுதும் முன்னர் எவ்வளவுக்கதிகமாய் தேவனிடம் ஜெபித்தாயோ அவ்வளவுக்கதிகமாய் வெற்றிபெற்ற பின்னரும், தேவனைத் துதிக்கவும் அவருக்கு நன்றியுள்ளவனாய் நன்றியுள்ளவளாய் இருக்கவும் மறவாதே. தொடர்ந்து நீ காலடி எடுத்து வைக்கும் புதிய கல்வியாண்டிலும் தேவனோடுள்ள உறவில் எவ்வித குறைவுமின்றி உனது சாட்சியைக் காத்துக்கொள்.*

*உனது தேர்வு முடிவுகளின் அடிப்படையில் எந்த படிப்பை மேற்கொள்வது என உனது வாஞ்சை ஒருபுறமிருக்க, உனது பெற்றோருடைய கற்பனைகள் மறுபுறமிருக்க, எல்லாவற்றைக் காட்டிலும் உன்னைக் உள்ளங்கையில் வரைந்து வைத்திருக்கும் தேவனது திட்டங்கள் மிக நேர்த்தியானது என்பதை மறந்து விடாதே.*

*தேர்வில் தோல்வி கண்டாலும் துவண்டுவிடக்கூடாது. ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் எப்படி அதிகரிக்கும்? குறுகியே போகும். (நீதி. 24:10) "இப்போது நான் செய்ய வேண்டியது என்ன? என்பதுதான் நீ கேட்க வேண்டிய கேள்வி. தொடர்ந்து முயற்சி செய்வதையே தேவன் எதிர்பார்க்கிறார் நாம் மதியற்றவர்களாயிருப்பதை அவர் விரும்பவில்லை. காலத்தைப் பிரயோஜனப்படுத்துவதையே அவர் விரும்புகிறார். வேறு எந்த கோழைத்தனமான தவறான முடிவுகளை எடுப்பது மதியீனம் அல்லவா.*

*"தட்டுங்கள், திறக்கப்படும்" இதுதான் இயேசு நமக்குக் கற்றுத் தந்தது. திறக்கும்வரை தட்டிக் கொண்டிரு. கால் தடுக்கிக்கீழே விழுவது தவறல்ல. ஆனால், நான் எழும்பவே மாட்டேன் என்று அடம் பிடிப்பதுதான் தவறு. திரும்ப எழும்ப தீர்மானிப்பது தான் நீ செய்ய வேண்டிய சரியான தீர்மானம். உன் தோல்வி நிரந்தரமானதல்ல. உன் தோல்வி உன் வாழ்வின் முடிவுமல்ல. இன்னும் அநேக வெற்றிகள் உனக்கு காத்திருக்கிறது என்பதை மறவாதே.*

*இந்த தற்காலிக தோல்வியையே என் வாழ்வில் நிரந்தரமானது என எண்ணிவிடாதே. தேவனுடைய உதவியை நாடி, தொடர்ந்து முயற்சி செய். வெற்றி நிச்சயம் உனக்கு உண்டு.*

*"உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு. அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்." (சங். 37:5)*

*உனது ஒளிவீசும் எதிர்கால வாழ்வை வாஞ்சிக்கும்*

*அன்புடன்*

**வில்லியம் தர்மராஜா**



---

## பணித்தளங்களுக்காய் ஜெபியுங்கள்

### தூத்துக்குடிமாவட்டம்

**பெரியநாயகபுரம் :** தலைமை அலுவலகம். நடைபெறுகிற ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். அனுசுயா என்ற சகோதரிக்கு சரீரத்தில் காணப்படும் பெலவீனம் மாறவும், மோனிகா என்ற சகோதரி ஊழியத்தின் பாதையில் வல்லமையாய் பயன்பட ஜெபியுங்கள்.

**தூத்துக்குடிரூரல்-தாளமுத்துநகர்:** பாரத் என்ற சிறுவனுக்கு அம்மை நோயிலிருந்து பூரண சுகம் உண்டாக, அன்ன புஷ்பம் சகோதரி அவர்கள் குடும்பத்தில் பிரச்சனைகள் மாற,

**பணித்தளம் : பிரமுத்துவிளை :** ராஜசேகர் ராஜ்குமார் முருகன் இவர்கள் இரட்சிக்கப்பட, விசாலட்சுமி இசக்கி இவர்களுக்கு தேவன் குழந்தை பாக்கியத்தை கட்டளையிட ஜெபியுங்கள். கரோலின் என்ற சகோதரிக்கு முதுகு தண்டு வடத்தில் காணப்படும் பெலவீனம் மாற நல்ல சுகம் உண்டாக ஜெபா என்ற சகோதரிக்கு மூச்சு திணறலில் இருந்து பூரண சுகம் உண்டாக

**பணித்தளம் : புதுக்கோட்டை :** ஜீவிதா என்ற சகோதரிக்கு குழந்தை பாக்கியத்தை தேவன் தரும்படியாக மீன்வளக் கல்லூரி விடுதி மாணவிகள் மத்தியில் தொடர்ந்து ஜெபம் நடைபெற தடைகள் மாற ஜெபியுங்கள். கோரம்பள்ளம்: பெண்கள் மத்தியில் தொடாந்து ஜெபம் நடைபெற முத்துஜெபசெல்வி சகோதரியின் கணவருக்கு இருதய அடைப்பிலிருந்து பூரண சுகம் உண்டாக ஜெபியுங்கள்.

**பணித்தளம் : ஆண்டாள் நகர் :** ராஜாராமன் நகர் காலனி : பானுமதி சகோதரிக்கு ரேஷன் கடையில் வேலை கிடைக்க நாசரேத் பகுதியில் இருக்கும் சொந்தமான நிலம் நல்ல விலைக்கு விற்கப்பட, இங்கு நடைபெறும் ஆராதனையில் தேவன் அநேக ஆத்துமாக்களை கொண்டு வர சமத்துவபுரம் : புதிய ஆராதனை நடைபெற ஜெபியுங்கள். அல்லிக்குளம் : சிறுவர் கூடுகையில் அநேக சிறுவர்கள் கலந்து கொள்ள ஜெபியுங்கள்.

**பணித்தளம் : தாதன்குளம் :** சிவா என்ற சகோதரர் மருத்துவ படிப்பிற்காக சீனாவுக்கு சென்றிருக்கிறார். தேவன் ஞானத்தை தரும்படியாக ஜெபியுங்கள். சினார்குளம் : வெள்ளைத்தாய் என்ற சகோதரி கணவனை இழந்து நிற்கும்

இவர்கள் குடும்பத்தை தேவன் ஆறுதல்படுத்த ஜெபியுங்கள். சேரகுளம் : லெட்சுமணபாண்டியன் என்ற சகோதரன் ஜெபம் நடத்துவதற்கு தடை செய்கிறார். தேவன் இந்த சகோதரரை சந்திக்கும்படியாக ஜெபியுங்கள். தடைகள் மாறவும் தொடர்ந்து ஜெபம் நடைபெற ஜெபியுங்கள். அரசகுளம் : லீலிபுஷ்பம் இவர்களுக்கு சுகர், பிரஷர் வியாதியிலிருந்து பூரண சுகம் கிடைக்க ஜெபியுங்கள்.

**பணித்தளம் : பேட்மாநகரம் :** ஆராதனையில் கலந்து கொள்கிறவர்கள் அபிஷேகம் பெற்றுக் கொள்ள ஜெபியுங்கள். முத்துச்சாமிபுரம் : சகோதரி ரூபிக்கு நெஞ்சுவலியிலிருந்து சுகம் கிடைக்க ஜெபியுங்கள். மீனாட்சிபட்டி : தர்மராஜ் பிரகாஷ் இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். சகோதரி ராஜகனி அவர்கள் ஞானஸ்நானம் எடுக்க ஜெபியுங்கள். பேரூர் : சகோதரி கலா அவர்கள் கடனில்லாமல் வீடு கட்டி முடிக்க ஜெபியுங்கள்.

**பணித்தளம் : பட்டாண்டிவிளை:** சிறுவர் ஜெபக்குழுவில் கலந்து கொள்ளும் பிள்ளைகள் இரட்சிக்கப்பட, சங்கீதாவின் தகப்பனார் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். பண்ணைவிளைபுதூர் : ரூபி என்ற சகோதரிக்கு சுகபிரசவத்தை தேவன் கட்டளையிட சாலமோன் என்ற சகோதரனுக்கு காலில் காணப்படுகிற பெலவீனம் மாறவும்., கண்ணாண்டி விளை : கவிதா பிரபா இவர்கள் ஜெபக்குழுவில் தடையில்லாமல் கலந்து கொள்ள ஜெபியுங்கள். பண்ணைவிளை : ஜெபக்குழுவிற்கு வரும் பிள்ளைகள் கர்த்தருக்கு சாட்சியாய் வாழ ஜெபியுங்கள்.

**பணித்தளம் : திருக்களூர் :** தங்கம் என்ற சகோதரிக்கு வயிற்று வலியிலிருந்து பூரண சுகம் உண்டாக ஜெபியுங்கள். மானாட்டூர் : சிறுவர் ஜெபக்குழுவில் சிறுபிள்ளைகள் தடையில்லாமல் கலந்து கொள்ள ஜெபியுங்கள். பிள்ளைகளின் குடும்பங்கள் இரட்சிக்கப்படவும், தேமான்குளம் : ஆறுமுகபெருமாள் என்ற தம்பிக்கு டெங்கு காய்ச்சலிலிருந்து சுகம் உண்டாக ஜெபியுங்கள்.

**பணித்தளம் : பழைய அப்பனேரி :** சந்திரா சகோதரியின் குடும்பத்தில் கடன் பிரச்சனைகள் மாறவும், குடும்பமாக ஆராதனையில் கலந்து கொள்ளவும் ஜெபியுங்கள். மேலப்பட்டி : கல்யாணி என்ற சகோதரியின் கணவருக்கு நிரந்தரமான வேலை கிடைக்க சித்திரம்பட்டி : சிறுவர் ஜெபக்குழு தடையில்லாமல் நடைபெற வெங்கடாசலபுரம் : சிறுவர் ஜெபக்குழு தொடர்ந்து நடைபெற ஜெபியுங்கள். கரிசல்பட்டி : கோதையம்மாள் பாட்டி இரட்சிக்கப்பட ஆராதனையில் அநேகர் கலந்து கொள்ள புது அப்பனேரி : குருவம்மாள் சகோதரியின் குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**விருதுநகர் மாவட்டம் :**

**பணித்தளம் : புல்லக்கவுண்டன்பட்டி :** லூர்தம்மாள் என்ற சகோதரிக்கு சுகர் வியாதியிலிருந்து சுகம் உண்டாக ஆலய வளாகம் காம்பவுண்ட் சுவர் பூசப்பட தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். லிங்கம்மாள் காளீஸ்வரபாண்டி பிரிவினை நீங்கி குடும்பத்தில் சமாதானம் உண்டாக ஜெபியுங்கள். சுமதி என்ற சகோதரியின் வீட்டு வேலையை நிறைவாய் செய்து முடிக்கப்பட தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளம் : முத்தாண்டியாபுரம் :** ஜமுனாவின் கணவர் நரம்பு தளர்ச்சியில் இருந்து பூரண சுகம் பெற்றக்கொள்ள ஜெபியுங்கள். மேட்டூர்.: கவிதாவின் குடும்பம் இரட்சிக்கப்பட ரெட்டியாபட்டி : ராமசாமி சாராள் கடன் பிரச்சனை



மாறவும், ராதாவின் கணவர் பிரிந்து வாழ்கிறார்கள் இரண்டு பேரும் இணைந்து வாழ ஜெபியுங்கள். வெள்ளையாபுரம் : ஸ்டெல்லா சகோதரிக்கு சுகபிரசவம் உண்டாக ஜெபியுங்கள்.

**பணித்தளம் : சாத்தூர் :** ராணி சகோதரியின் குடும்பம் மீண்டும் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபியுங்கள். ஸ்ரீ ரெங்காபுரம் : ஆர்த்தி சகோதரி கணவரோடு இணைந்து வாழ நடுச்சூரங்குடி : முத்து சகோதரியின் தாயாருக்கு 2 காது நன்றாக கேட்க மேட்டுப்பட்டி காலணி : முனியசாமி சகோதரனின் மனைவிக்கு சுகபிரசவத்தை தேவன் கட்டளையிட நல்லான்செட்டிபட்டி : மாலதி அவர்கள் வீடு சீக்கிரமாக கட்டி முடித்து பிரதிஷ்டை செய்ய ஜெபியுங்கள். ஆலம்பட்டி : சத்யா அவர்களின் கணவர் இரட்சிக்கப்பட வாழவந்தாழ்புரம் : சக்திவேல் இன்சினியர் அவர்களுக்கு சரீரத்தில் காணப்படுகிற பெலவீனங்கள் மாறவும் ஜெபியுங்கள். அணைக்கரைபட்டி : பக்தவத்சலம் குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளம் : ஜமீன் சல்வார்பட்டி :** எஸ்தர் என்ற சகோதரிக்கு திருமண காரியம் நடைபெற, அபிலாஷ் என்ற சகோதரருக்கு நல்ல வேலை கிடைக்க, ஈஸ்வரன் என்ற சகோதரனுக்கு சரீரத்தில் காணப்படும் சுகவீனம் மாற ஜெபியுங்கள்.

**பணித்தளம் : பண்டுதன் பட்டி :** ஆலயத்தில் வைத்து நடைபெறும் சிறுவர் கூடுகையை தேவன் ஆசீர்வதிக்க, சிறுவர்கள் ஆலயத்திற்கு தொடர்ந்து கடந்து வர ஜெபியுங்கள். ஆலத்தூர் : முத்து என்ற சகோதரி ஞானஸ்நானம் எடுக்க ஆலயத்திற்கு கடந்து வர ஜெபியுங்கள். மாலையூரணிப்பட்டி : கலா சகோதரியின் வீட்டில் நடைபெறும் ஆராதனையில் விசுவாசிகள் வருவதற்கு காணப்படும் தடைகள் மாற, ஒருமனம் உண்டாக ஜெபியுங்கள். நாகபாளையம் : ஆராதனையில் புதிய ஆத்துமாக்கள் கலந்து கொள்ள மல்லி : ஆண்ட்ரூஸ் என்ற சகோதரர் வீடு கட்டுவதற்கு பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளம்: : சிவகாசி :** முத்துச்சாமிபுரம், நாரணாபுரம்புதூர், ஆசாரி காலனி, சிறுவர் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட ஈசாக்கு என்பவருக்கு நன்றாக காது கேட்க மேரி, உஷா, லீதியாள் இவர்களுக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் ஆசீர்வதித்து தர ஜெபியுங்கள்.

**பணித்தளம் : N. திருவேங்கிடபுரம் :** கன்னித்தேவன்பட்டி : ஞாயிறு ஆராதனை நடைபெற ஆலயம் கட்டுவதற்கு பணத்தேவை சந்திக்கப்பட **ரெட்டியாப்பட்டி** சகோதரி எமிமாள் ஆலயத்திற்கு கடந்து வர ஜெபியுங்கள்.

**பணித்தளம் : ஏழாயிரம் பண்ணை:** ஹரிகிருஷ்ணன் தம்பியினுடைய தகப்பனார் கண்ணன் குடும்பத்தில் எந்த பிரச்சனையும் செய்யாதபடி சமாதானமாய் வாழ ஜெபியுங்கள். இந்தரா சகோதரியின் தீப்பெட்டி ஆபிஸில் பெண்கள் ஜெபம் தவறாமல் நடைபெற, திறப்பின் வாயில் ஜெபத்திற்கு அநேக மக்கள் கலந்து கொள்ள அப்பனம்பட்டி : சிறுவர் ஜெபக்குழு தடையில்லாமல் நடைபெற ஜெபியுங்கள்.

**மதுரை மாவட்டம் : பணித்தளம் : திரளி :** கிழவனேரி : சகோதரி சாந்தி அவர்கள் வீட்டில் நடைபெறும் ஆராதனையில் அநேகர் கலந்து கொள்ள எப்சிபா என்ற சகோதரிக்கு திருமணத் தடை நீங்க, எல்லா கிராமங்களிலும் தொடர்ச்சியாக

ஊழியத்தை செய்யும்படியாக ஜெபியுங்கள்.

**திருநெல்வேலி மாவட்டம் :**

**பணித்தளம் : அழகப்பபுரம் :** ஆலயத்தைச் சுற்றிலும் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள். நம்பிபத்து : சகோதரி ரீட்டா அவர்களின் கணவர் இரட்சிக்கப்பட, கடன் பிரச்சனைகள் மாற, குடும்பத்தில் சமாதானம் உண்டாக, சகோதரி ராஜாத்தியம்மா மகன் ராஜேஷ் சென்னையில் வேலை பார்த்து வருகிறார் பணியில் எந்த பிரச்சனையும் வராதபடி தேவன் காத்துக் கொள்ள ஜெபியுங்கள்.

**பணித்தளம் : திருவேங்கடம் :** செல்லம்பட்டி - பெருமாள் சகோதரியின் சரீரத்தில் காணப்படும் பெலவீனம் மாற, இயேசுவை ஏற்றுக்கொள்ள ஊமைதலைவன்பட்டி : பிரிந்திருக்கிற அருணாச்சலம் குடும்பத்தை தேவன் இணைக்கவும், கலைச்செல்வி என்ற சகோதரி 12ம் வகுப்பில் நல்ல மதிப்பெண் பெற

**பணித்தளம் : வடமலாபுரம் :** தர்மத்தூரனி, சமத்துவபுரம், நடுவக்குறிச்சி மக்கள் தேவனை அறிந்து இரட்சிக்கப்பட, மாடத்தியம்மாள் மகன் குடும்பம் இரட்சிக்கப்பட,

**பணித்தளம் : அய்யனேரி** சங்கரபாண்டியபுரம் : ஆராதனைக்கு வருகிற புறஜாதியார்கள் வசனத்தை கேட்டு இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள். கொட்டமடைக்கப்பட்டி : மாணிக்கம் பூரண சுகம் உண்டாக பிள்ளையார் நத்தம் காலனி: Nursing படித்திருக்கிற கன்னியம்மாள் சகோதரிக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபியுங்கள். மூலவியாதியால் பாதிக்கப்பட்டு இருக்கும் தினகரனுக்கு பூரண சுகம் உண்டாக ஜெபியுங்கள். இளையரசனேந்தல் : அர்சுனன் முழுமையாக இரட்சிக்கப்பட நல்ல வீடு கிடைக்க ஜெபியுங்கள்.

**பணித்தளம் : மைப்பாறை** : பாமா சகோதரிக்கு தேவன் குழந்தை பாக்கியத்தை கட்டளையிட குகன்பாறை : பிரபாகர் 10ம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற, அருணாச்சலபுரம் : அமுதா அவர்களின் குடும்பம் இரட்சிக்கப்பட

**பணித்தளம் : அத்தியூத்து :** ராமு ஈஸ்வரி இவர்களுக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் தரும்படியாக கருவநல்லூர் : இசக்கிபாண்டி இந்திரா இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். சீதப்பநல்லூர் - முத்து சகோதரிக்கு இருதய பெலவீனம் மாற, கிருபாகரனுக்கு நல்ல வேலை கிடைக்க ஜெபியுங்கள். சோலைசேரி : சகோதரி காசிபாண்டியன் இருதய பெலவீனம் மாற ஜெபியுங்கள். சகோதரி பிரியாவின் திருமண காரியம் நடைபெற ஜெபியுங்கள்.

**திண்டுக்கல் மாவட்டம்**

**பணித்தளம் : தொப்பம்பட்டி :** அப்பாவுபிள்ளைபட்டி: சரவணன் 10ம் வகுப்பில் தேர்ச்சி அடைய, லதா என்ற சகோதரிக்கு நல்ல தொழில் ஆரம்பிக்க, திவ்யா, பவித்ரா, கார்த்திகா வாலிப சகோதரிகள் ஆராதனையில் கலந்து கொள்ள ஜெபியுங்கள். கோடாங்கிநாயக்கன்பட்டி : பால்சாமி சகோதரருக்கு நுரையீரல் கிட்னி பாதிப்பிலிருந்து நல்ல சுகம் உண்டாக ஜெபியுங்கள். தாதம்பட்டி : ஊழியத்திற்கு தேவன் திறந்த வாசலை தரவும், செல்வநகர் : ராசம்மாள், முனியம்மாள் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுக்க நிலக்கோட்டை : கிருபாவிற்கு ஏற்ற வேளையில் திருமண காரியத்தை தேவன் நடத்தி வைக்க ஜெபியுங்கள்.



**பணித்தளம் : விராலிப்பட்டி :** முத்துகுமார் சகோதரருக்கு சரீரத்தில் நல்ல சுகம் கிடைக்கவும், நல்ல வேலை கிடைக்கவும், பாண்டி சகோதரருக்கு கடன் பிரச்சனை மாறவம் ஜெபியுங்கள். சின்னநாயக்கன் கோட்டை : ஜேம்ஸ் சகோதரருக்கு நல்ல வீடு கிடைக்க ஊத்துப்பட்டி : முருகேஷன் ஈஸ்வரி குடும்பங்களில் காணப்படும் கஷ்டங்கள் மாற ஜெபியுங்கள்.

**அரியலூர் மாவட்டம் : பணித்தளம் : வெத்தியார் வெட்டு ( மிஸ்பா)** சபையில் பூச்சுமான பணி நடைபெற, பணத்தேவைகள் சந்திக்கப்பட, செந்தில்குமார் சகோதரருக்கு 3 மாத காலமாக முழாங்காலில் காணப்படும் வீக்கம் மாற, காட்டாத்தூர் : தேவனுக்கென்று ஓர் ஆலயம் கட்டப்பட ஜெபியுங்கள். நல்லூர் : ரமேஷ் சகோதரருக்கு திருமணமாகி 10 ஆண்டுகள் ஆகிறது. குழந்தை பாக்கியத்தை தேவன் கட்டளையிட, சலுப்பை : 21 வயது சௌந்தர் நன்றாக வாய் பேச தேவன் அற்புதம் செய்ய ஜெபியுங்கள்.

**திருச்சி மாவட்டம்**

**பணித்தளம் : தோப்புபட்டி -** செல்வநாயகம் சகோதரர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் தேவன் கிருபையாய் விடுதலை தர, அந்தோணி சகோதரர் கிட்னி பாதிப்பிலிருந்து நல்ல சுகம் பெற்றுக்கொள்ள ஜெபியுங்கள். பழைய கோட்டை : முத்துக்கன்னு சகோதரர் தேமல் வியாதி நீங்க, நாகம்மாள் சகோதரிக்கு கெட்ட கனவுகளிலிருந்து விடுதலை பெற, மாதந்தோறும் நடைபெறும் 3- வது சனிக்கிழமை உபவாச ஜெபத்தில் அநேகர் கலந்து கொள்ள, சபை வளர்ச்சியடைய, ஆரோக்கியராஜ் குடும்பத்தினருக்கு குழந்தை பாக்கியத்தை தேவன் தரும்படியாக ஜெபியுங்கள்.

## துதியுங்கள்

**பணித்தளம் : திருச்சி மாவட்டம் :** கொட்டுகாளான்பட்டியில் எதிர்ப்பை மாற்றி, ஊழியத்திற்கு தேவன் தந்த திறந்த வாசலுக்காக துதியுங்கள்.

**திருநெல்வேலி மாவட்டம்**

**பணித்தளம் : வடமலாபுரம் :** மழைக்காக ஜெபித்தோம் தேவன் ஜெபத்தைக் கேட்டு நல்ல மழையை தந்ததற்காய் தேவனைத் துதியுங்கள்.

**பணித்தளம் : மைப்பாறை :** ஆலய சன்னல் கதவுகள் போடப்பட்டதற்காக, காளியம்மாள் தாயார் மரணபடுக்கையில் இருந்தார் கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு நல்ல சுகத்தை கொடுத்தார். தேவனைத்துதியுங்கள்.

**தூத்துக்குடி மாவட்டம்**

**ஆண்டாள் நகர் :** ஆலயத்திற்கு மிஷனெரி வீட்டிற்கு ஜன்னல் கதவுகள் புதுப்பிக்கப்பட தேவன் கிருபை செய்ததற்காய் தேவனைத் துதியுங்கள்.

**தாளமுத்து நகர் :** சகோதரி வனஜாவுக்கு சுகபிரசவத்தை தேவன் கட்டளையிட்டதற்காக, வந்தனாவுக்கு தைராய்டு ஆப்ரேஷன் சுகமாய் நடந்து முடிந்ததற்காக தேவனைத் துதியுங்கள்.

**விருதுநகர் மாவட்டம்**

**ஏழாயிரம் பண்ணை :** சதீஷ் சகோதரருக்கு மஞ்சள் காமாலை நோய்க்காக ஜெபித்தோம். தேவன் சுகத்தை கொடுத்தற்காய் தேவனைத் துதியுங்கள்.

**பண்டுதன் பட்டி :** மலையூரணிபட்டி ஆராதனையில் தேவன் தந்த புதிய குடும்பத்திற்காக தேவனைத் துதியுங்கள். **ஜமீன் சல்வார்பட்டி :** ஜெபராணி

என்ற சகோதரிக்கு ஆசிரியர் பணியை தேவன் தந்தததற்காக
**பணித்தளம் : சாத்தூர் :மேட்டுப்பட்டி காலனி** - முனியசாமி குடும்பத்தில் இருந்த கடன்பிரச்சனையை தேவன் மாற்றினதற்காக தேவனைத் துதியுங்கள்.
நல்லான் செட்டிபட்டி : மாலதி என்ற சகோதரிக்கு வீடு கட்டுமான பணியை நல்ல முறையில் கட்டி முடிக்கப்பட தேவன் கிருபை செய்ததற்காய் தேவனைத் துதியுங்கள்.

# திருவசனத் தேர்வு

நமது ஊழியத்தின் மூலம் வாரம் 4 என்ற புத்தகம் 52X4 வசனங்கள் என்ற அடிப்படையில் மனனம் செய்ய வெளியிடப்பட்டது. அந்த புத்தகத்தில் மொத்தம் 208 வசனங்கள் இருப்பிடம் எளிதில் நினைவில் வைக்க வசதியாக உள்ள விதத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வசனங்கள் அடிப்படையில் ஒரு திருவசனத்தேர்வு நடைபெறும், தேர்வு **செப்டம்பர்** மாதத்தில் நடைபெறும். தேதி ஜீலை மாத இதழில் வெளியிடுவோம். தேர்வுகள் ஞாயிற்று கிழமை மதியம் 3 மணி முதல் 4.30 மணி வரை நடத்தப்படும்.

தேர்வு : **9 - 15 வயதினர்** **16 - 30 வயதினர்,**
**31 - 45 வயதினர்** **45க்கு மேலான வயதினர்**

என 4 பிரிவினர்களுக்கு நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 பேருக்கு பரிசுகள் உண்டு, தேர்வினை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம்.

தேர்வை நீங்கள் உங்கள் ஆலயத்தில், ஜெபஜக்கியத்தில், பள்ளி, கல்லூரியில் எழுதலாம். ஒரு தேர்வு மையத்திற்கு 25 பேருக்கு குறையாமல் எழுத வேண்டும்.

அல்லது நாங்கள் குறிப்பிடும் மையத்திற்கு வந்து எழுத வேண்டும். 25 பேருக்கு குறையாமல் எழுதும் தேர்வு மையங்களுக்கு தேர்வு மையம் வாரியாக முதல் பரிசுகள் 4 உண்டு. (1 பிரிவினருக்கு ஒரு பரிசு வீதம்)

தேர்வுக்கு அனுமதி கட்டணம் : ரூ.20 /- மட்டும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**கிருபையின் ஊழியங்கள், ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101.**

**Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.**

**வாரம் 4 என்ற புத்தகம் தேவையானவர்கள் தபாலில் பெற ரூ. 25 அனுப்பியோ, நேரில் பெற ரூ. 20 செலுத்தியோ பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு**
94432 89026, 94421 20257, 94431 95395, 94861 71004, 94429 94126, 94862 33442, 9442913156, 94428 13511, 94881 03026

**சகோ. பொற்செல்வன் ஆசீர் செய்திகள் அடங்கிய DVDகள்**

**1. உன்னத சீயோன்**
**2. வேதத்தின் மகத்துவம்**
**3. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை**
**4. ஆசீர்வதிப்பதே தேவனின் பிரியம்**

*ஒவ்வொன்றின் விலை ரூ. 30/-*



# பாவத்திற்கு விலகி ஓடு! பரிசுத்தத்தை காத்துக்கொள்!!

S. ஜெபராஜ் தலைவர், கிருபையின் ஊழியங்கள்

கர்த்தரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்துவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த இதழில் வாசித்தது போல பகைக்கிறவர்களை நேசிக்கவும் பகைக்கிறவர்களையும் துன்பப்படுத்துகிறவர்களையும் மன்னித்து ஜெபிக்கவும் கிறிஸ்துவுக்குள்ளாய் தீர்மானித்து செயல்படுவீர்கள் என விசுவாசிக்கிறேன். நமக்கு உரிமை இல்லாததை உரிமையாக்கத் துணியாமல் எந்தப் பாவமும் தேவனுக்கு விரோதமானது என்ற பயத்துடனும் நடுக்கத்துடனும் பரிசுத்தத்தை காத்து கொள்வதைக் குறித்த தியானிக்க தேவன் விரும்புகிறார்.

ஆதியாகமத்தின் புத்தகத்தில் யோசேப்பு என்பவரது வாழ்க்கையைக் குறித்து வாசிக்கிறோம். ஆபிராகமின் குமாரனாகிய யாக்கோபுக்கு ராகேல் பெற்ற இரண்டு குமாரரில் மூத்தவர் தகப்பனால் அதிகமாய் நேசிக்கப்பட்டவர். இதினிமித்தம் சகோதரர்களால் பகைக்கப்பட்டார். யோசேப்பு கண்ட சொப்பனங்களைச் சொன்னதினிமித்தம் சகோதரர்களுக்கு இன்னும் பொறாமை உண்டாயிற்று. ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த தன் சகோதரர்களைப் பார்க்கும்படி தோத்தானுக்கு சென்றபோது யோசேப்பை பிடித்து அவன் சொந்த சகோதரர்கள் குழியில் போட்டு பின் இஸ்மவேலர் கையில் 20 வெள்ளிக்காசுக்கு விற்றார்கள் (ஆதி37:28) அவர்கள் யோசேப்பை எகிப்திலே போர்த்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள். அவனை தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிக்கும் விசாரணைக் காரணாக்கினது முதற்கொண்டு கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார் (ஆதி. 39:5)..

**தனக்கு உரிமை இல்லாததை உரிமையாக்க துணியாத யோசேப்பு**

வீட்டிலும் வெளியிலும் அவனுக்கு போத்திபார் உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது. ஆகையால் போத்திபார் தனக்கு உண்டானதையெல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புக்கொடுத்துவிட்டு தான் புசிக்கிற போஜனம் தவிர தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக்குறித்தும் விசாரியாதிருந்தான் (ஆதி 39:5,6) எனவே யோசேப்பு கூறுவதை பார்க்கிறோம். இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை (ஆதி39:9) ஆனால் தன் எஜமானுடைய மனைவியின் சொல்லுக்கு இணங்காமல் இன்னும் அவன் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டபோது நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி? என்று கூறி (ஆதி39:9) அசுத்தமான சூழ்நிலையை விட்டு ஓடிப் போகிறான். கர்த்தர் சீனாய் மலையில் மோசே மூலமாய் கொடுத்த கற்பனை பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக: பிறனுடைய வீட்டையும், அவனுடைய நிலத்தையும், அவனுடைய வேலைக்காரனையும், வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக, (உபா5:21) என்பது. ஆனால் இது கொடுக்கப்படும் முன்பாகவே யோசேப்பு இதை நேர்த்தியாய் கடைபிடித்து வாழ்ந்தார். என்றால் இதைவிட மேன்மையான வேறொரு பரிசுத்த பண்பு இல்லையே, இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும். எனவே

இச்சைகளை தேவ பெலத்தினால் மேற்கொள்ளும்போது பாவம் செய்யாமல் நம்மை காத்துக்கொள்ள முடியும். பார்வைக்கு இன்பமும் புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு ஏவாள் அதின் கனியைப் பறித்து புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள். இப்படியாக தேவனுடைய கட்டளை இச்சையின் மூலமாக மீறப்பட்டு உலகில் பாவம் பிரவேசித்தது. (ஆதி3:6) தேவ கட்டளைக்கு கீழ்படியாத ஆதாமும் ஏவாளும் அதற்கான காரணத்தை ஒருவர் இன்னொருவர் மீது சுமத்துகின்றனர். தேவனுடைய பிள்ளைகளே உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தேவனுக்கு கீழ்படியாமற் போனதற்கான காரணம் நீங்களே என்று உணர்ந்து ஒப்புக்கொள்கிறதற்கு மாறாக மற்றவர்களைக் காரணம் கூறுகிறீர்களோ? பாவங்களை அறிக்கை செய்து விட்டு விடுகிறவன் இரக்கம் பெறுவான். (நீதி28:13) தேவ சமூகத்தில் மன்னிப்பை பெற்றுக் கொள்வோம். உனக்கு உரிமை இல்லாத எதையும் இச்சிக்காதே மற்றவர்களின் உடமையும், உரிமையும் பாதிக்கும் எந்த செயலிலும் உன்னைக் விலக்கிக் காத்துக் கொள்.

**பாவம் தேவனுக்கு விரோதமான பகை**

பகையை சிலுவையினால் கொன்று பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச் சுவரைத் தகர்த்து புதிய மனுஷனை உருவாக்கினார். (எபேசி 2:14-16)என்பதாக வேதம் தெளிவு படுத்துகிறது. பாவம் தேவனுக்கு விரோதமான பகை என்பதை மறந்து போகக்கூடாது. தாவீது பாவத்திற்குட்டபோது நாத்தான் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து அவன் பாவத்தை உணர்த்தின போது சங்கீதம் 51ஐ பாடுகிறார். தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து உமது கண்களுக்கு முன்பாக பொல்லாங்கானதை நடப்பித்தேன் (சங்51:4) என்று மனந்திருந்தி பாடுகிறார். தேவபிள்ளைகளாகிய நீங்கள் பரிசுத்தமல்லாத காரியங்களுக்கு உடன்படும்போது தேவனுக்கு பகைஞராகிறீர்கள். பாவச் சோதனைகள் எதிரிடும் பொழுது இயேசுவை நினைத்துக் கொள்ளுங்கள். எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிராதான ஆசாரியர் நமக்கிருக்கிறார். (எபி 4:14) நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம். (எபி.12:1). பாவச் சோதனைகளை நீங்கள் சந்திக்கும்போது அவைகள் உங்களை மேற்கொள்ளாதபடி உதறித் தள்ளிவிட்டு இச்சைகளுக்கு விலகி பரிசுத்தமாய் உங்களைக் காத்துக் கொள்ள பழகிக் கொள்ளுங்கள். இயேசு பிசாசினால் சோதிக்கப்படும் பொழுது அவர் மாம்சத்தின் இச்சையை ஜெயித்தார். (மத்4:3-4) கண்களின் இச்சை ஜீவனத்தின் பெருமை இவைகளை வேதவசனத்தைக் கொண்டே ஜெயித்தார். அப்பொழுது பிசாசானவன் அவரைவிட்டு விலகிப் போனான். தேவதூதர்கள் வந்து அவருக்கு பணிவிடை செய்தார்கள். (மத்4:11) நீங்களும் இயேசுவைப் போல பரிசுத்தமாய் வாழ முயற்சி செய்வீர்களா? இச்சையடக்கமுள்ளவர்களாய் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். தேவன்தாமே பாவ இச்சைகளுக்கு உங்களை விலக்கி பரிசுத்தமாய் காத்துகொள்வார். தேவதூதர்கள் உங்களுக்கு ஊழியம் செய்வார்கள்.

எனது தீர்மானம் : எனக்கு உரிமை இல்லாத எதையும் எனக்கு உரிமையாக்கத் துணியாமல், எந்தப் பாவமும் தேவனுக்கு விரோதமானது என்ற பயத்துடனும் நடுக்கத்துடனும் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்ளத் தீர்மானிக்கிறேன்.



## செய்திகள்

புதிதாகக் கருவாகியுள்ள முட்டையில், நம்மைத் திணற டிக்கும் அளவிற்கு மிக ஏராளமான விபரங்கள் அடங்கியுள்ளன, இவை ஒரு தனிநபரின் ஆயுள் முழுவதையும் கட்டுப்படுத்தப் போதுமானவை. ஒரு மானிட செல்லின் ஒரு மரபணு இழையில் ( டி என் ஏ ) ஆயிரம் புத்தகங்கள் கொண்ட ஒரு நூலகம் அளவிற்கு விபரங்கள் உள்ளன.

- கருத்தரித்து ஐந்து முதல் ஒன்பது நாட்களுக்குள் அந்தப் புதிய நபர் பாதுகாப்பையும் போஷாக்கையும் நாடி, கருவறைக்குள் புதைந்து கொள்கிறான். இதற்குள்ளேயே அவனுடைய பாலினத்தை அறிவியல் முறைகள் மூலம் கண்டறிய முடியும்..
- பதினான்கு நாட்களில் குழந்தை ஒரு வித ஹார்மோனை சுரக்க ஆரம்பிக்கிறது.
- கருத்தரித்து பதினெட்டு நாட்களில் இதயம் உருவாக ஆரம்பிக்கிறது. கண்கள் வளர்ச்சி பெற ஆரம்பிக்கின்றன.
- இருபத்தொரு நாட்களில் கருவின் இதயம், கருவின் உடல் முழுவதற்கும் இரத்தத்தை “ பம்ப்” செய்ய ஆரம்பித்து விடுகிறது.
- 28 நாட்களில் கருவுக்குக் கை கால்களை முளைக்க ஆரம்பிக்கின்றன.
- 30 நாட்களுக்குள் அவளுக்கு மூளை உருவாகி விடுகிறது.
- 35 நாட்களில், அவளுடைய கண், மூக்கு, வாய், போன்ற உறுப்புகள் வடிவம் பெற ஆரம்பிக்கின்றன.
- 40 நாட்களில் கருவிலுள்ள குழந்தையின் மூளை அதிர்வுகளைப் பதிவு செய்யமுடியும். மூன்று வாரங்களுக்கு முன்பே துடிக்கத் தொடங்கிவிட்ட அவளுடைய இதயத்துடிப்பை அல்ட்ராசானிக் ஸ்டெதாஸ்கோப் மூலம் உணரமுடியும்..
- 42 நாட்களில் எலும்புக்கூடு உருவாகி விடுகிறது. அவளுடைய மூளை அவளது அங்க அசைவுகளைக் கட்டுப்படுத்த ஆரம்பித்து விடுகிறது.
- கருத்தரித்து 8 வாரங்களில் கைகளும் கால்களும் ஏறக்குறைய பூரண வடிவு பெற்றுவிட்டன.
- 9 வாரங்களில் குழந்தை தன் உள்ளங்கையில் வைக்கப்படும் எதையும் பிடிப்பதற்குத் தன் விரல்களை மடக்கக்கூடும். நகங்கள் வளர ஆரம்பித்து விட்டன. குழந்தை தன் விரலைச் சப்ப ஆரம்பித்துவிட்டது.
- கருவிலுள்ள 9 வார குழந்தை ஏற்கனவே அழகாக குட்டிக்காரணம் போடுவதிலும் திரும்பிப்படுப்பதிலும் கால்களை உதைப்பதிலும் தேறிவிட்டது. இன்னும் பிறவாத சிசு வெளியிலிருந்து வரும் தூண்டுதல்களுக்குப் பதிலளிக்கும் விதமாக அசைவுகளை உண்டாக்கும். அது வலியைக் கூட உணரமுடியும் .
- கருத்தரித்து 10 வாரங்களில் குழந்தை முனகுகிறது, விழுங்குகிறது, முகத்தைச் சுளிக்கிறது.
- 11 வாரங்களில் அவன் சிறுநீர் கழிக்க ஆரம்பிக்கிறான்,. முகத்தை எண்கோணலாக்க முடியும். புன்முறுவல் பூக்கவும் முடியும்..
- 12 வாரங்களில் குழந்தை கால்களை உதைக்கிறது, பாதங்களைத் திருப்புகிறது, விரல்களை நீட்டி மடக்குகிறது , கையை இறுக

மூடிக்கொள்கிறது , பெருவிரல்களை அசைக்கிறது , மணிக்கட்டுகளை மடக்குகிறது , வாயைத் திறந்து மூடுகிறது.

இவை அனைத்தும் குழந்தை உருவாகிய அந்த முதல் மூன்று மாதங்களிலேயே நடைபெறுகின்றன. அவன் கருவறைக்குள் இருக்கும் எஞ்சியுள்ள ஆறு மாத காலத்தில் புதிதாக எதுவும் முளைப்பதோ, இயங்க ஆரம்பிப்பதோ இல்லை. முழு வடிவம் பெற்றுவிட்ட குழந்தை வளர்ந்து, முதிர்ச்சி மட்டுமே அடைகிறது.

## MECOGEN - V.B.S - 2013

ஒரு கிராமத்தில் ஒரு VBSநடத்த தேவை ரூ. 3000/-

VBS நடைபெறவுள்ள கிராமங்களின் எண்ணிக்கை 325

325 VBS கள் மூலம் சந்திக்கப்படவுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 16,500.

325 VBS களை தாங்கும் 325 நபர்கள் தேவை. தேவன் உங்களோடு பேசினால் ஜெபத்துடன் தாங்க முன் வாருங்கள் என அன்புடன் அழைக்கிறோம்.

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

Young Soul Winners Mission, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101

வங்கி கணக்கு எண் :

| | | | |
|---|---|---|---|
| Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |

### ஜெபக்குறிப்புகள்

இவ்வூழியம் விசேஷமாக கிராம சிறுவர்களுக்காக ஆலயமில்லா கிராமங்களை மையமாக வைத்து நடத்தப்படும் ஊழியமாகும். இந்த ஆண்டு 325 கிராமங்களுக்கும் மேலாக ஒவ்வொரு கிராமங்களிலும் 6 நாட்கள் நடத்தி அதன்மூலம் 16,500 சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தைச் சொல்லத் திட்டமிட்டுள்ளோம்.

1. வெளி3:8இன்படி நாம் திட்டமிட்டபடி 325 கிராமங்களுக்கும் மேலாக கிராமங்களில் திறந்த வாசலை கர்த்தர் நமக்குத் தரும்படியாக...
2. மாற்.18:14இன்படி எல்லா சிறுவர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள..
3. ஏசா.54:17இன்படி எதிர்ப்புகள் மாற...
4. தன்னார்வ ஊழியர்களைப் பயிற்றுவிக்க நடைபெறும் 2 நாட்கள் பயிற்சி வகுப்புகள் (4 இடங்களில்) தேவன் ஆசீர்வதிக்க..
5. தேவையான 400 தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்ப...
6. நமது ஊழியர்களுடன் தன்னார்வ ஊழியர்கள் கிராமங்களில் பணி செய்யும்போது சக.9:8இன்படி தேவ பாதுகாப்பு இருக்க...
7. ஒரு VBSக்கு ரூ.3000 வீதம் கொடுத்து தாங்குவோரை தேவன் எழுப்ப..
8. கடந்த ஆண்டில் எதிர்ப்பினால் நடத்த முடியாமல் போன கிராமங்களில் தடைகளை மாற்றி, இந்த ஆண்டு நடத்த தேவன் கிருபை தர....
9. VBSஇன் மொத்த தேவை ரூ. 9 இலட்சத்து 75 ஆயிரம் சந்திக்கப்பட
10. VBSநடைபெறும் கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட தேவன் வாசல்களை திறக்க.
11. VBS நடைபெறும் கிராமங்களில் தேவன் செழிப்பை ஆசீர்வாதத்தைக் கட்டளையிட.



**வெளிவந்துவிட்டது! வாங்கி பயனடையுங்கள்!**

**‘வெற்றிப் பாதையில் நான்’ மாணவர்களுக்கான சிறப்பு புத்தகம்**

விலை ரூ. 10/-

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

# திறப்பின் வாயில் ஜெபம்

**2013 மே 29 கடைசி புதன்**

**காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194

# *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2013 மே 28 – கடைசி செவ்வாய்**

**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.